செ.வெ.எண்: 29 / மார்ச் நாள்: 16.03.2016

## இராமநாதபுரம் மாவட்டம்

## மாவட்ட நிர்வாகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வாக்காளர் விழிப்புணர்வு நடவடிக்கைகளின் மூலம் நடைபெறவிருக்கும் சட்டமன்ற பொதுத்தேர்தலில் 100 சதவீத வாக்குப்பதிவு எய்திடும் சூழ்நிலை உண்டாகும்

## மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ச.நடராஜன், இ.ஆ.ப., அவர்கள் தகவல்

இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் நகரப் பகுதிகளில் இன்று (16.03.2016) மாவட்டத் தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் பல்வேறு வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை துவக்கி வைத்து பொதுமக்களிடையே வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

முதலாவதாக, மாவட்டத் தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் இராமநாதபுரம் புதிய பேருந்து நிலைய வளாகத்தில், மாவட்டத்தில் தேர்தல் தொடர்பான புகார்களை தெரிவிக்க ஏதுவாக மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் செயல்பட்டு வரும் தேர்தல் கட்டுப்பாட்டு அறையின் தொலைபேசி எண் 1800 425 7038 குறித்த விளம்பரம் ஒட்டுவில்லைகளை பொதுமக்கள் எளிதில் அறிந்து கொள்ளும் வகையில் பேருந்துகளில் ஒட்டி விழிப்புணர்வு ஏற்படுத்தினார். அதன்பின்பு, இராமநாதபுரம் புதிய பேருந்து நிலையம் அருகே உள்ள வாராந்திர சந்தையில் வாக்காளர் விழிப்புணர்வு குறித்த துண்டு பிரசுரங்களை பொதுமக்களுக்கு வழங்கி வாக்களிப்பதன் அவசியம் குறித்து எடுத்துரைத்தார்.

பள்ளியில் பயிலும் மாணவ, மாணவியர்களின் மூலம் அவர்களது பெற்றோர்களிடத்தில் தவறாமல் வாக்களிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தும் வகையில் வாக்காளர் உறுதிமொழி படிவம் வழங்கி பெற்றோர்களிடமிருந்து கையொப்பம் பெற்று வர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதனடிப்படையில் இராமநாதபுரம் நகராட்சி அலுவலகம் அருகேயுள்ள அறிஞர் அண்ணா நடுநிலைப்பள்ளியில் பயிலும் மாணவ,மாணவியர்களிடத்தில் மாவட்டத் தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் வாக்காளர் உறுதிமொழி படிவத்தினை வழங்கி மாணவ, மாணவியர்களாகிய நீங்கள் உங்களது பெற்றோர்களிடத்தில் தேர்தல் நாளான மே 16 அன்று தவறாமல் வாக்களித்திட வேண்டும் என்று வலியுறுத்திட வேண்டும் என அறிவுரை வழங்கினார். அதைத் தொடர்ந்து இண்டேன் (Indane) சமையல் எரிவாயு வாலியா சேமிப்புக் கிடங்கில் உள்ள சமையல் எரிவாயு உருளைகளில் வாக்காளர் விழிப்புணர்வு குறித்த ஒட்டுவில்லைகளை ஒட்டி விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

மாவட்ட நிர்வாகத்தின் மூலம் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வரும் இதுபோன்ற பல்வேறு வாக்காளர் விழிப்புணர்வு நடவடிக்கைகளின் மூலம் பொதுமக்களிடையே வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுவதோடு நடைபெறவிருக்கும் சட்டமன்ற பொதுத்தேர்தலில் 100 சதவீத வாக்குப்பதிவினை எய்திடும் சூழ்நிலை உண்டாகும் என மாவட்டத் தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில் இராமநாதபுரம் வருவாய் கோட்டாட்சியர் திரு.ராம்பிரதீபன், மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.ராஜசேகரன், வட்டாரப் போக்குவரத்து அலுவலர் திரு.ஜே.சேக்முகமது, வட்டாட்சியர் திரு.மாரி உள்பட அரசு அலுவலர்கள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**
**புகைப்படம் : மின்னஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளது.**